

சென்னை, ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (21.7.2025) சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட நீதியரசர் மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா அவர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.




சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் நேற்று முன்தினம் (21.7.2025) நடைபெற்ற விழாவில், உயிர்மை பதிப்பகம் சார்பாக திருமதி. துர்கா ஸ்டாலின் எழுதிய "அவரும் நானும் பாகம் 2" நூலினை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி வெளியிட, முதல் பிரதியை டாபே குழுமத்தின் தலைவர்/நிருவாக இயக்குநர் திருமதி. மல்லிகா சீனிவாசன் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கவிஞர் மனுஷ்ய புத்திரன், பத்திரிகையாளர் திருமதி. லோகநாயகி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும், மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி, 'உயிர்மை' இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில்

# ஆடித் திருவாதிரை விழா முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் ஆய்வு!

அரியலூர், ஜூலை 23-

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடித்திருவாதிரை விழா இன்று (23.07.2025 அமைச்சர் பெருமக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு விழா தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வாஷ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தை தலைமையிடமாக கொண்டு ஆட்சிபுரிந்த மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரின் கோரிக்கையினை ஏற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாமன்னன் இராஜேந்திரன் சோழன் அவர்களின் பிறந்த நாளான ஆடித் திருவாதிரை நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என அறிவித்துள்ளார்கள். அந்த வகையில் 2022ஆம் ஆண்டு முதல் ஆடித் திருவாதிரை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிற்கான ஆடித் திருவாதிரை விழா இன்று (23.07.2025) கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைச்சர் பெருமக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அதன்படி கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆடித் திருவாதிரை விழா தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மேடை அமைக்கும் பணிகள், அடிப்படை வசதிகள், பாதுகாப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

பின்னர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்தநாள் ஆடித்திருவாதிரை நாளினை அரசு விழாவாக கொண்டாடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு இன்று 23.07.2025ஆம் தேதி மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்தநாள் ஆடித் திருவாதிரை விழா நடைபெற இருக்கிறது. இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம்.தென்னரசு, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை பி.கே.சேகர் பாபு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவதை போன்று இந்த ஆண்டும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது.

காலை 10 மணியளவில் அமைச்சர் பெருமக்கள் தொடக்க விழாவில் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைக்க மாலை வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகளோடு இவ்விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது. அந்த வகையில் காலை 11 மணிக்கு உருபாணர் குழுவினரின் யாழிசை நிகழ்ச்சியும், காலை 11.30 மணிக்கு திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி மாணவ, மாணவியரின் தென்னாட்டு பெருவேந்தன் நாட்டிய நாடகமும், நண்பகல் 12 மணியளவில் கலைப் பண்பாட்டுத்துறையினரின் மாபெரும் கிராமிய இசை, நடன நிகழ்ச்சியும் (பறை, கரகம், துடும்பாட்டம்) நடைபெற உள்ளது.

மேலும், நண்பகல் 12.30 மணியளவில் முனைவர். பர்வீன் சுல்தானா அவர்களின் தலைமையில் சோழர்கள் புகழுக்கு பெரிதும் காரணம் நிருவாகத் திறனே! போர் வெற்றிகளே! பட்டிமன்ற நிகழ்ச்சியும், மதிய உணவு இடைவேளைக்கு பிறகு 2.30 மணியளவில் அரியலூர் மாவட்ட பள்ளிகள் சார்பில் பல்சுவை நிகழ்ச்சி களும், மாலை 3.30 மணயளவில் கலைச்சுடர் மணி ஒ.கே.எஸ் போஸ் குழுவினரின் நையாண்டி மேளமும், கலைச்சுடர் மணி மலைச்சாமி குழுவினரின் கரகாட்டமும், அஸ்தினாபுரம் கலைமணி குழுவினரின் காவடியாட்டமும், வல்லம் செல்வி குழுவினரின் மக்களிசை பாடல்களும், மாலை 4.30 மணியளவில் ஆடுதுறை பாஸ்கர் குழுவினரின் மாமன்னர் இராஜேந்திர சோழன் நாடகமும், மாலை 5 மணியளவில் பெரம்பலூர் இளவழகன் குழு வினரின் மயில்காவடி நிகழ்ச்சியும், புதுக்கோட்டை செல்ல தங்கையா குழுவினரின் கிராமிய பாடல்கள் நிகழ்ச்சியும் என காலை 9.30 மணிக்கு துவங்குகின்ற நிகழ்ச்சி மாலை 6 மணி வரை நடைபெற இருக்கிறது.

இம்மண்ணுக்கு புகழ் சேர்த்து, காடாக இருந்த இப்பகுதியை நாடாக மாற்றியமைத்து கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் அமைவதற்கு இம்மாபெரும் கோவிலை கட்டி, பொன்னேரியை அமைத்து பெருமை சேர்த்த மாமன்னன் இராஜேந்திர சோழனுடைய பிறந்த நாளை கொண்டாடுவது என்பது அரியலூர் மாவட்ட மக்களின் மகிழ்ச்சியான ஒரு நிகழ்வாகும். அதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகுதான் அரசு விழாவாக அறிவித்து அரசு சார்பாக முன்னெடுத்து நடத்தப்பட்டு வருகிறது.

அன்றையதினம் அரியலூர் மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே, இந்த ஆண்டு நடைபெறுகின்ற மகத்தான இவ்விழாவில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பெரு மளவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பி.திருவருள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் த.சம்பத்குமார், ஜெயங்கொண்டம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் இரா.மணிமாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடித்திருவாதிரை விழா வருகின்ற இன்று (23.07.2025) அமைச்சர் பெருமக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு விழா தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வாஷ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.



நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நினைவு நாளை முன்னிட்டு புத்தூரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், லீலாவேலு, துணை மேயர் திவ்யா, கோட்டத் தலைவர் ஜெயநிர்மலா, பகுதி கழக செயலாளர்கள் மோகன், பாபு, ராஜ்முஹம்மது, மணிவேல், விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

### நடப்புக் கல்வியாண்டில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில்

# 574 தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை,ஜூலை 23-

சென்னை, இராணி மேரி கல்லூரியில் நேற்று முன்தினம் (21.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் நிரப்பபடவுள்ள 574 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவு இணையதளத்தினை தொடங்கி வைத்தார்.

இது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற வேண்டும், அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக, அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. இதில் நிரந்தர ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை, மாணாக்கர்களுக்கான கல்வி கற்றலில் தொய்வு ஏற்படாமல் இருக்க 574 கௌரவ விரிவுரையாளர் களை தற்காலிகமாக பணியமர்த்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் உரிய கல்வித் தகுதியுடன் ஒளிவுமறைவற்ற முறையில், வெளிப்படைத் தன்மையுடன் நிரப்பிட கல்லூரிக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங் களை www.tngasa.org என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். 34 பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள 574 பணியிடங்களின் விவரங்கள் மேற்கண்ட இணைய தளத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன.

தகுதியுள்ள நபர்கள் www.tngasa.org என்ற இணையதளத்தில் (21.07.2025) முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதி நாள் 04.08.2025 ஆகும். தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளைப் பின்பற்றியும், கல்வித்தகுதி மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பீடுகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கரூர் வேலம்மாள் வித்யாலயா பள்ளியில், சி.பி.எஸ்.இ. கிளஸ்டர் அதலடிக் மீட் விளையாட்டுப் போட்டிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், தமிழ்நாடு தடகள தங்க மகன் மாரியப்பன் தங்கவேலு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.